**ஜனவரி – 30**

# TNPSC துளிகள்

- 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், 'வன்னியர்' இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் நிகழ்த்தப் பட்ட காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 21 "சமூக நீதி ஆர்வலர்கள்" நினைவாக தமிழக முதல்வர் விழுப்புரத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு மணி மண்டபத்தினை (நினைவுச் சின்னம்) திறந்து வைத்தார்.
- முன்னாள் முதலமைச்சர்கள் C.N. அண்ணாதுரை மற்றும் மு. கருணாநிதி ஆகியோர் தலைமையிலான அமைச்சரவைகளில் பணியாற்றிய கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி எனுமிடத்தில் நிறுவப்பட்ட நினைவுச் சின்னத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- ePlane என்ற நிறுவனம், e200X எனப்படுகின்ற அதன் eVTOL விமானத்திற்கான வகை சார் சான்றிதழுக்குப் பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திடமிருந்து (DGCA) முறையான ஒப்புதலைப் பெற்ற முதல் தனியார் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- திப்ருகர் நகரானது, அசாம் மாநிலத்தின் இரண்டாவது தலைநகராக உருவாக்கப்படும் என்று அசாம் அரசு அறிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் M.K.ஜெயின் தலைமையில் பொது வங்கிகள் மற்றும் சிறு நிதி வங்கிகளுக்கான (SFBs) விண்ணப்பங்களை நல் மதிப்பீடு செய்வதற்காக வேண்டி 5 உறுப்பினர்களைக் கொண்ட புதிய வெளிப்புற ஆலோசனைக் குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று, உலக சுகாதார அமைப்பினால் மலேரியா பாதிப்பு இல்லாத நாடாகச் சான்றளிக்கப்பட்ட 45வது நாடாக ஜார்ஜியா மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் மீன்வள விதிமுறைகளை அமல்படுத்துதல் 2025




| | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|
| Total hatcheries | 4 Large | 4 Large | 4 Large |
| Total nests | 387 | 490 | 430 |
| Total eggs | 41,326 | 55,713 | 42,650 |
| Hatched | 36,686 | 46,755 | 5,300 |

- ஆலிவ் ரெட்லி கடல் ஆமை (சிற்றாமை) உயிரிழப்புகள் குறித்து மீண்டும் மறு ஆய்வு செய்வதற்காக வேண்டி அமைக்கப்பட்ட பணிக்குழுவானது, இந்த இனங்களின் அதிக உயிரிழப்பு விகிதத்தினை தடுப்பதற்காக என மீன்வள விதிமுறைகளை கடுமையாக அமல்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு துறைகளின் நிபுணத்துவத்தினை ஒன்றிணைத்து, கூட்டு அணுகுமுறையை மேற்கொள்வதற்காக என இந்தப் பணிக் குழு

என்பது உருவாக்கப்பட்டது.

- இதன்படி அமல்படுத்தப்பட வேண்டிய மூன்று முக்கிய நடவடிக்கைகள்:
    - இழுவை மீன்பிடி படகுகளுக்குத் தடை,
    - மீன்பிடியின் போது ஆமைகள் தப்பிக்க வழி வகை செய்யும் சாதனங்களை (TED) பயன்படுத்துதல், மற்றும்
    - படகு எஞ்சின்களின் குதிரைத் திறன் மீதான கட்டுப்பாடுகள்.
- 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில கடல் சார் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் ஆனது, ஆமைகள் வலையமைக்கும் பருவத்தில் சில வலையமைக்கும் மற்றும் அவை இனப் பெருக்கம் செய்யும் பகுதிகளிலிருந்து ஐந்து கடல் மைல்களுக்குள் நன்கு இயந்திர மயமாக்கப் பட்ட மீன்பிடி படகுகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது.
- மீன்பிடி வலைகளில் TED சாதனங்களைப் பயன்படுத்துவதை மிகவும் தீவிரமாக அமல்படுத்துவதை உறுதி செய்யவும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

## வாசிப்பு மற்றும் எண்கணிதத் திறனில் மீட்சி – தமிழ்நாடு

A look at the key findings pertaining to Tamil Nadu in the ASER report 2025

Enrolment in Classes I to V in govt. schools*

| Year | Boys | Girls |
|---|---|---|
| 2018 | 59.11 | 65.7 |
| 2022 | 71.1 | 75.4 |
| 2024 | 62.2 | 67 |

Enrolment in Classes VI to VIII in govt. schools

| Year | Boys | Girls |
|---|---|---|
| 2018 | 70 | 75.4 |
| 2022 | 76.2 | 80.8 |
| 2024 | 71.3 | 75.3 |

Children who can read in Class V

| Year | Govt. | Pvt. |
|---|---|---|
| 2018 | 46.3 | 28.8 |
| 2022 | 26 | 22.4 |
| 2024 | 37 | 32.3 |

Children who can do division in Class V

| Year | Govt. | Pvt. |
|---|---|---|
| 2018 | 27.1 | 22.2 |
| 2022 | 14.7 | 15.5 |
| 2024 | 20.2 | 22.1 |


- 2024 ஆம் ஆண்டு வருடாந்திர கல்வி நிலை அறிக்கையின் (ASER) படி, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு மாநிலத்தில் வாசிப்பு மற்றும் எண்கணிதத்தில் குறிப்பிடத்தக்க மீட்சியானது பதிவாகியுள்ளது.
- இதன்படி அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த மூன்றாம் வகுப்பு பயிலும் குழந்தைகளில் 4.8% குழந்தைகளால் மட்டுமே, 2022 ஆம் ஆண்டில் இரண்டாம் வகுப்பு பாடப் புத்தகத்தினை வாசிக்க முடிந்தது ஆனால் 2024 ஆம் ஆண்டில் இந்த முக்கிய எண்ணிக்கை 12% ஆக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான நிலைகளுடன் ஒப்பிடும்போது, வாசிப்புத் திறனில் 10.4% அதிகரிப்புடனும், எண்கணித திறனில் 5.8% அதிகரிப்புடனும் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் வாசிப்பு மற்றும் எண்கணிதத் திறன்கள் மேம்பட்டுள்ளன.
- மூன்றாம் வகுப்பில் கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் சுமார் 27.7% பேர் கழித்தல் கணக்குகளையும் மற்றும் ஐந்தாம் வகுப்பில் கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் சுமார் 20.7% பேர் வகுத்தல் கணக்குகளையும் செய்வதற்கான திறன்களைக்

கொண்டிருந்தனர்.

- தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் சேர்க்கையில் சரிவு என்பது பதிவாகியுள்ளது.
- 2014 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சேர்க்கை விகிதமானது, சுமார் 67.2 சதவீதத்தில் இருந்து 75.7% ஆக அதிகரித்திருந்தாலும், 2024 ஆம் ஆண்டில் அது 68.7% ஆகக் குறைந்து உள்ளது.
- தனியார் பள்ளிகளின் சேர்க்கையானது நன்கு அதிகரித்து, 31 சதவீதத்துடன் கோவிட்-19 பெருந்தொற்றிற்கு முந்தைய நிலையை எட்டியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடச் செய்யும் போது அங்கன்வாடிகளில் சேர்க்கையானது ஓரளவு குறைந்துள்ளது.
- தமிழ்நாடு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் கணிதத் திறன் (FLN) பயிற்சியில், தேசிய சராசரியான 83.2 சதவீதத்தினை விட அதிகமாக தொடர்ந்து முன்னணியில் உள்ளது.
- இதில் சுமார் 90.4% பள்ளிகள் FLN பயிற்சியில் கவனம் செலுத்துவதற்கான உத்தரவைப் பெறுகின்றன.

# தேசியச் செய்திகள்

## ASER 2024 அறிக்கை




- வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை (ASER) 2024 ஆனது ஒரு அரசு சாரா நிறுவனமான பிரதாம் அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.
- மிகவும் ஒரு அடிப்படை நிலையிலான எண்கணிதத் திறனில் குறைந்தபட்சம் கழித்தல் கணக்குகளை செய்யக் கூடிய மூன்றாம் வகுப்பு பயிலும் குழந்தைகளின் சதவீதம் 2024 ஆம் ஆண்டில் 33.7% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 25.9% ஆக இருந்தது.
- இதன்படி இரண்டாம் வகுப்பு மட்டத்திலான பாடத்தை படிக்கக்கூடிய ஐந்தாம் வகுப்பு குழந்தைகளின் சதவீதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 44.8% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 38.5% ஆக இருந்தது.

- 2018 ஆம் ஆண்டில் 72.4% ஆக இருந்த சராசரி மாணாக்கர் வருகை ஆனது, 2022 ஆம் ஆண்டில் 73% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 75.9% ஆகவும் உயர்ந்துள்ளது.
- அதே நேரத்தில், 2018 ஆம் ஆண்டில் 85.1% ஆக இருந்த சராசரி ஆசிரியர் வருகை ஆனது, 2022 ஆம் ஆண்டில் 86.8% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 87.5% ஆகவும் உயர்ந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 44% ஆக இருந்த சுமார் 60க்கும் குறைவான குழந்தைகள் சேர்க்கை பதிவாகியுள்ள அரசு தொடக்கப் பள்ளிகளின் சதவீதம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 52.1% ஆக கணிசமாக அதிகரித்துள்ளது.
- 14 வயது முதல் 16 வயது வரையிலான பதின்ம வயதினரில், 89% பேர் வீட்டில் திறன் பேசிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- 3 வயது குழந்தைகளில், முன்பள்ளி நிறுவனங்களில் சேர்க்கையானது 2018 ஆம் ஆண்டில் 68.1% ஆக இருந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 75.8% ஆக இருந்து 2024 ஆம் ஆண்டில் 77.4% ஆக அதிகரித்துள்ளது.
- 4 வயது குழந்தைகளில், அகில இந்திய முன்பள்ளி நிறுவனச் சேர்க்கை எண்ணிக்கை ஆனது 2018 ஆம் ஆண்டில் 76% ஆக இருந்து, 2022 ஆம் 82% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 83.3% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 5 வயது குழந்தைகளில், 2018 ஆம் ஆண்டில் 58.5% ஆகவும், 2022 ஆம் ஆண்டில் அது 62.2% ஆகவும் உயர்ந்து, 2024 ஆம் ஆண்டில் சுமார் 71.4% ஆகவும் உயர்ந்துள்ளதுடன் இந்த எண்ணிக்கையிலும் பெரிய அதிகரிப்பு பதிவானது.
- அனைத்து மாநிலங்களிலும், 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட மாணாக்கர்களின் சேர்க்கையானது 2024 ஆம் ஆண்டில் 95 சதவீதத்தினை விட அதிகமாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், அகில இந்திய அளவிலான அரசுப் பள்ளிச் சேர்க்கை ஆனது 66.8% ஆகக் குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் பள்ளியில் சேராத 15 முதல் 16 வயதுடைய குழந்தைகளின் விகிதம் 7.9% ஆக இருந்தது.
- இதன்படி பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ள பெண்களுக்கான கழிப்பறைகள் உள்ள பள்ளிகளின் விகிதம் ஆனது 2018 ஆம் ஆண்டில் 66.4% ஆக இருந்த ஒரு நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 68.4% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 72% ஆகவும் அதிகரித்தது.
- 2024 ஆம் ஆண்டில், 66.2% பள்ளிகளில் விளையாட்டு மைதானம் உள்ள நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 68.9% ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 66.5% ஆகவும் இருந்தது.

## 2025 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்புக் காட்சி வாகனங்கள்

- 76வது குடியரசு தினக் கொண்டாட்டங்களில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நிகழ்வினைக் காட்சிப்படுத்தும் உத்தரப் பிரதேச மாநிலத்தின் அணிவகுப்புக் காட்சி வாகனமானது, 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த அணிவகுப்புக் காட்சி வாகனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- "Eternal Reverence: The Worship of 14 Deities in Tripura - Kharchi Puja" என்ற கருத்துருவிலான திரிபுரா மாநிலத்தின் அணிவகுப்புக் காட்சி வாகனமானது இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- "Etikoppaka Bommalu - Eco-Friendly Wooden Toys - சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் நன்கு தயாரிக்கப் பட்ட பொம்மை வகைகள்" என்ற ஒரு கருத்துருவிலான ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் அணிவகுப்புக் காட்சி வாகனமானது மூன்றாவது இடத்தைப் பெற்றது.
- படைப் பிரிவுகளில் சிறந்த அணிவகுப்புப் படையாக ஜம்மு & காஷ்மீர் ரைபிள்ஸ் படைப் பிரிவு தேர்வு செய்யப்பட்டது.

- மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) /துணைப் படைகள் பிரிவில் டெல்லி காவல் அணி வகுப்புப் படை வெற்றி பெற்றது.
- மத்திய அமைச்சகங்கள்/துறைகளில், பழங்குடியின விவகாரங்கள் அமைச்சகத்தின் "ஜன்ஜாதிய கௌரவ் வர்ஷ்" என்ற அணிவகுப்புக் காட்சி வாகனத்திற்கு விருதானது வழங்கப் பட்டது.
- "அமைச்சகத்தின் விரிவான திட்டங்களின் கீழ் ஆதரவளிக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பன்முகப் பயணம்" என்ற சித்தரிப்பிற்காக வேண்டி பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் விருதினை வென்றது.
- இதில் கூடுதலாக, இரண்டு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.
    - "இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகள்" என்ற கருத்துருவிலான அதன் அணி வகுப்புக் காட்சி வாகனத்திற்காக வேண்டி மத்தியப் பொதுப் பணித் துறைக்கு (CPWD) ஒன்றும்,
    - மற்றொன்று 'ஜெயதி ஜெய் மமா பாரதம்' நடனக் குழுவிற்கு வேண்டி அதன் நடன நிகழ்ச்சிக்காகவும் வழங்கப்பட்டன.
- முதன்முறையாக, 'ஷஷக்த் ஔர் சுரக்சித் பாரத்' (வலுவான மற்றும் பாதுகாப்பான இந்தியா) என்ற கருத்துருவில் முப்படைகளின் அணிவகுப்புக் காட்சி வாகனம் காட்சிப் படுத்தப் பட்டது.




## இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது ஜனவரி 25 ஆம் தேதியன்று, தேசத்திற்கான தனது 75 ஆண்டு காலச் சேவையினைக் கொண்டாடியது.
- இந்தியா குடியரசாக மாறுவதற்கு ஒரு நாள் முன்னதாக, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது ஒரு நிரந்தர அரசியலமைப்பு அமைப்பாகும்.
- முதலில் இந்த ஆணையத்தில் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மட்டுமே இருந்தார் என்ற நிலையில் தற்போது இது ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களைக் கொண்டுள்ளது.
- 1989 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதியன்று முதன்முறையாக இரண்டு கூடுதல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர் ஆனால் அவர்கள் 1990 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி வரை என்ற மிகக் குறுகிய பதவிக் காலத்தைக் கொண்டிருந்தனர்.
- பின்னர், 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று இரண்டு கூடுதல் தேர்தல்

ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர்.




## உச்ச நீதிமன்றத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு





- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது தனது 75 ஆம் ஆண்டு நிறைவினை கொண்டாடுகிறது.
- இந்தியா 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தை கொண்டிருந்தது.
- மாகாணங்களுக்கு இடையிலான சில தகராறுகளைக் கையாளுதல் மற்றும் கீழமை நீதிமன்றங்களின் மேல்முறையீடுகளை விசாரித்தல் போன்ற செயல்பாடுகளை மேற் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் ஆனது 1937 முதல் 1950 ஆம் ஆண்டு வரை செயல் பட்டது.
- இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய வடிவம் நிறுவப்பட்டது.
- இது இலண்டனில் உள்ள கூட்டாட்சி நீதிமன்றம் மற்றும் மேலவையின் நீதித்துறை குழுவிற்கு மாற்றாக அமைந்தது.
- அதன் முதல் அமர்வானது தற்போதைய வளாகத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னதாக,

பாராளுமன்றக் கட்டிடத்தில் உள்ள இளவரசர்களின் அறையில் நடைபெற்றது.

- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதியன்று நடைபெற்ற அந்நீதிமன்றத்தின் முதல் அமர்வில் ஆறு நீதிபதிகள் பணியாற்றினர்.
- பாராளுமன்றமானது 1950 ஆம் ஆண்டில் 8 ஆக இருந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 2019 ஆம் ஆண்டில் 34 ஆக உயர்த்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா – சீனா இடையிலான 75 ஆண்டுகால அரசுமுறை உறவுகள்




- இந்தியாவும் சீனாவும் கைலாஷ் மானசரோவர் யாத்திரையையும் இரு நாடுகளுக்கும் இடையேயான நேரடி விமான சேவைகளையும் 2025 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்க ஒப்புக் கொண்டுள்ளன.
- இது புது டெல்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையேயான அரசுமுறை உறவுகள் நிறுவப் பட்ட 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- கைலாஷ் மானசரோவர் யாத்திரை மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் ஆனது 2020 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டன.
- முன்னதாக 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், முக்கிய எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் ஆறு அம்சங்கள் மீதான ஒப்பந்தங்களில் உடன்பாடுகளைத் தெரிவித்தன.
- 2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தக மதிப்பு, 126.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டிய நிலையில் இது 1.9 சதவீதம் என்ற வருடாந்திர வளர்ச்சியைக் காட்டுகிறது.
- சீன நாட்டுத் தூதரகமானது கடந்த ஆண்டு இந்தியர்களுக்கு 280,000 நுழைவு இசைவுச் சீட்டுகளை வழங்கியுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## பண வழங்கீட்டுச் சேவை அமைப்புகள் குறித்த அறிக்கை 2024

- இந்தியாவின் எண்ணிம வழி பண வழங்கீட்டுச் சேவைகளில் 2019 ஆம் ஆண்டில் 34 சதவீதமாக இருந்த, ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) வழியான

பண வழங்கீடு ஆனது 2024 ஆம் ஆண்டில் 83 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- கடந்த ஐந்து ஆண்டுகளில் இதில் 74 சதவீதக் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதமானது (CAGR) பதிவானது.
- RTGS, NEFT, IMPS, கடன் அட்டைகள், பற்று அட்டைகள் போன்ற பிற பண வழங்கீட்டுச் சேவை அமைப்புகளில் எண்ணிம வழியான பண வழங்கீட்டு மதிப்பானது அதே காலக் கட்டத்தில் 66 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பு ஆனது 2018 ஆம் ஆண்டில் 5.86 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 246.83 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், இந்தியாவில் சுமார் 208.5 பில்லியன் எண்ணிம வழி பண பரிவர்த்தனைகள் பதிவானது.
- UPI லைட் சேவையில், தினசரி 2.04 மில்லியன் பரிவர்த்தனைகள் பதிவானது என்ற ஒரு நிலையில் இதன் மதிப்பானது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுமார் 20.02 கோடி ரூபாயாக இருந்தது.




## இதரச் செய்திகள்

### ஃபோர்ப்ஸ் இதழின் உலகளவில் முன்னணியில் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட 50 பெண்மணிகளின் பட்டியல் 2025



- ஃபோர்ப்ஸ் இதழின் உலகளவில் முன்னணியில் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட 50 பெண்மணிகளின் பட்டியலில் மூன்று இந்தியப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.

- உயிரி மருந்துத் தொழில்துறையின் முக்கியத் தொழில்முனைவரும், இந்தியாவின் மிக வெற்றிகரமான மற்றும் சுயமாக உழைத்து முன்னேறிய பெண்களில் ஒருவருமான பெங்களூருவைச் சேர்ந்த கோடீஸ்வரரான கிரண் மஜும்தார்-ஷா இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- ஊர்மிளா ஆஷர் குஜராத்தி சமையல் நிபுணத்துவத்தில் வேரூன்றிய குஜ்ஜு பென் நா நாஸ்டா என்ற உணவு வணிகத்தைத் தொடங்கினார்.
- 1952 ஆம் ஆண்டில் பிறந்த ஷீலா படேல், குடிசைவாசிகளின் உரிமைகளுக்காக எனப் போராடுவதற்கும், சமமான நகர்ப்புற இடங்களை உருவாக்குவதற்கும் மிகப்பெரும் அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒரு புகழ்பெற்ற ஆர்வலர் மற்றும் கல்வியாளர் ஆவார்.
- 1984 ஆம் ஆண்டில் இவர் மும்பையில் உள்ள முக்கியப் பகுதி வள மையங்களை மேம்படுத்துவதற்கான சங்கத்தினை (SPARC) இணைந்து நிறுவினார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★